# திருப்பூர் மாநகராட்சி

**2018 நவம்பர் மாதம் 30–ந் தேதி**
**நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில்**
**நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**
**357 முதல் 368 வரை**

## திருப்பூர் மாநகராட்சி

**2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 12.30 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு . க. சிவகுமார் எம்.ஏ.,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

*****

**357)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பற்றாக்குறை உள்ள இடங்களுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்க 26.10.02018ம் தேதியன்று வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் முதல் உறை பிரிக்கப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதாலும் ஒப்பந்ததாரர்களின் 2வது உறை 29.10.2018ம் தேதியன்று திறக்கப்பட்டது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் மற்றும் முகவரி | லாரி ஒன்றிற்கு நடை ஒன்றிற்கு 5000 லிட்டர் கொள்ளளவு |
|---|---|---|
| 1. | திரு எம்.அப்புசாமி<br>15, குறிஞ்சி நகர் விரிவு, திருப்பூர்–4. | ரூ.456/– |
| 2. | திரு டி.எஸ்.சிவக்குமார்,<br>42, கந்தசாமி வீதி, திருப்பூர். | ரூ.547/– |
| 3. | திரு வி.கோபாலகிருஷ்ணன்,<br>கவுண்டம்பாளையம், திருப்பூர். | ரூ.581/– |

இப்பணிக்கு 29.10.2018ம் தேதியன்று திறக்கப்பட்ட இரண்டாவது உறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் விலைவிகிதம் குறைவானதாக திரு எம்.அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து பரிசீலனைக்கும் மற்றும் முடிவிற்கும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

குடிநீர் பணி என்பதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒப்பந்தம் முடிவடைந்ததாலும் பணியின் அவசர அவசியம் கருதியும், மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதி பெற்று உள்ளூர் நிலவரத்திற்கு ஏற்ப உள்ள விலைவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொண்டதனை மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ.1 / 5247 / 2018)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**358)** இம்மாநகராட்சி பகுதியில் டெங்கு மற்றும் பன்றி காய்ச்சல் போன்ற தொற்றுநோய்கள் தடுப்பு பணிக்கு பிளீச்சிங் பவுடர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி பீளிச்சிங்பவுடர் இருப்பு குறைவாக இருப்பதால் அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு 60 வார்டு பகுதியில் தினசரி 350 கிலோ வீதம் மூன்று மாதத்திற்கு மொத்தம் தோராயமாக 30 டன் தேவைப்படுகிறது. இதனை உடன் வாங்கும் பொருட்டு அரசு ஆணை எண்.330 தொழில் துறை நாள் 03.05.1991ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி ஏற்கனவே இம்மாநகராட்சியில் பெறப்பட்ட 20.08.2018ம் தேதிய ஒப்பந்தப்புள்ளியைவிட குறைவாக இருப்பதால் தமிழ்நாடு மல்டிபர்பர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி நிறுவனத்தார் எடுத்துக் கொண்ட விலைப்புள்ளி டன் ஒன்றுக்கு Rs.31347/- + 18% GST Rs.5642.46 = Rs.36989.46 என்ற அடிப்படையில் 30 டன் பிளீச்சிங் பவுடர் வாங்கிக் கொள்ள திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 15–ன்படி ஆணையரின் அதிகார

**358–ன் தொடர்ச்சி**

வரம்பிற்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் பதிவு செய்யலாம். **( எச்.1 / 5629 / 2018)**

– – – – – –

## தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

– – – – –

**359)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கும், சத்துணவு மையங்களுக்கும், குடிசை பகுதிகளிலும் அவ்வப்போது குடிநீர் தேவைப்படும் இடங்களுக்கும் வாடகை லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாநகரில் அம்ரூத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் முடிவடையும் வரையில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் தேவைப்படுவதால் **01.12.2018**ம் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகை லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய **26.11.2018**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எம். அப்புசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி உத்திரவு **30.11.2018**ம் தேதி வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. எனவே **01.12.2018** முதல் **31.12.2018** வரை மாநகரில் குடிநீர் விநியோகம் லாரிகள் மூலம் செய்ய ஒரு மாத காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**17.50** இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.1 / 5247 / 2018)

– – – – –

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**360)** திருப்பூர் மாநகராட்சி நான்காம் குடிநீர் திட்டம் ( அம்ரூத் 2017–18)ன் கீழ் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க கடல் மட்டம் ( MSL) 400m–க்கு மேல் இருக்கும் வகையில் தகுதியான நிலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் அத்தகைய இடம் ஒன்று அன்னூர் வருவாய் வட்டம், ஒட்டர்பாளையம் கிராமத்தில் க.ச.எண். **98 / 5, 6**எ, **6**பி, **97/1** எப்–ல் **6.00** ஏக்கர் நிலமும், மற்றும் அணுகுபாதை க.ச.எண்.**99, 94/1** எ, **94/1** எ**5, 100 /1, 2, 4, 5, 6, 8, 112/1, 113 / 1** எ, **1** பி, **1** சி, **2** எ, **2** பி, **2** டி மற்றும் **113 / 4**பி, **4** டி , **4** சி ஆகிய சாலைகளில் 30' 00" அகலத்தில் தென்வடல் சாலையும், **82** சென்ட் விஸ்தினமுள்ள நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதன் உரிமையாளர்களான திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் இந்த இடத்தினை திருப்பூர் மாநகராட்சிக்கு தானமாக வழங்க முன்வந்துள்ளார்கள். எனவே மேற்படி இடத்தினை மாநகராட்சி தானமாக ஏற்றுக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். **( ந.க.எண். இ.1 / 6099 / 2018 )**

– – – – –

## தீர்மானம் : ஒப்புதல் வழங்கப்பட்டது.

– – – – –

**361)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நேர்முக கடித எண். 1588 / 2011/ ஜே.1, நாள் 01.06.2016—ன்படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சலை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளி மாணவ / மாணவிகளுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் நிலவேம்பு கசாயம் வழங்கக் கோரி அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து இம்மாநகராட்சி பகுதிகளிலுள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் பொது இடங்களில் நிலவேம்பு குடிநீர் வழங்க வேண்டி இருப்பதால் பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு நிலவேம்பு கசாயம் பவுடர் 1200 கிலோ தேவைப்படுவதை அரசு நிறுவனமான Tampcol Chennai நிறுவனத்தின் விலைப்புள்ளி அடிப்படையில் வாங்கிக் கொள்ள அனுமதியும் மற்றும் அதற்கான செலவீனம் ரூ.4,05,888/— இலட்சத்திற்கு திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 15—ன்படி ஆணையரின் அதிகார வரம்பிற்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் பதிவு செய்யலாம். ( எச்.1 / 274 / 2016 )

— — — —

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

— — — — —

**362)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை —5 அவர்களின் நேர்முக கடித எண். 1588/2015 / ஜே.1, நாள் 15.06.2015, 28.03.2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை—5 அவர்களின் கடித ந.க.எண். 2571 / J 1 / 2017 நாள் 14—02—2017ன் படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த, தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே பார்வையில் கண்டுள்ள உத்திரவில் 300 குடும்பங்களுக்கு ஒரு கொசு தடுப்பு பணியாளர் (DBC) வீதம் தற்காலிகமாக நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் 60 வார்டு பகுதிகளிலும் கொசு தடுப்பு பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும், தற்போது டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்த தினமும் மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல் பெறப்பட்டு ஆறுநாள் வட்ட சுழற்சி அடிப்படையில் பணி புரிய ஏதுவாக மண்டலம் ஒன்றுக்கு 150 நபர்கள் வீதம் நான்கு மண்டலங்களுக்கு மொத்தம் 600 DBC பணியாளர்களை அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு 01—12—2018 முதல் 31—12—2018 வரையுள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் மகளிர் சுயஉதவிக்குழு பணியாளர்கள்/இதர தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தி பணிபுரிய அதற்கான நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேசசெலவீனம் ரூ.45.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. செலவீனத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இம்மாநகரில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 01.12.2018 முதல் 31.12.2018 வரையுள்ள காலத்திற்கு மட்டும் தினக்கூலி அடிப்படையில் தினசரி 600 DBC பணியாளர்களை பணியமர்த்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

( எச்.1 /1446 / 2018 )

— — — —

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

**363)** திருப்பூர் மாநகராட்சி தெருவிளக்குப் பிரிவில் தெருவிளக்குகளை தானியங்கி முறையில் ஒளிரச் செய்யவும், மின்பாதையில் மின்வடம் புதுப்பிக்கவும், மின்இணைப்பு பெட்டிகளை புதுப்பிக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.28.60 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மாமன்றத் தனது 1231 ஆம் எண்ணிட்ட 26.02.2014ஆம் தீர்மானத்தில் (PPP Mode) அரசு மற்றும் தனியார் ஒப்பந்த திட்ட பணிக்கு அனுமதி வழங்கியுள்ளது.
2. மேற்காண் ஒப்பந்தத்தில் கூடுதல் மின்சேமிப்பு உபகரணங்கள் மேற்படி ஒப்பந்தத்தில் Section (2) பிரிவு 17(ல்) மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காண் மதிப்பீட்டு செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.4 / 6153 / 2018)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**364)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 4, வார்டு எண்.55ல் உள்ள சுண்டமேடு பகுதியில் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள 10000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி 1984 வருடம் கட்டி முடிக்கப்பட்டது. மேற்கண்ட மேல்நிலைத் தொட்டி அமைத்து 34 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இந்த மேல்நிலைத்தொட்டி மாநகராட்சி ஆவதற்கு முன்பாக ஊராட்சியாக இருந்த போதே பயன்பாட்டில் இல்லாமல் இருந்தது. மேலும், மேல்நிலை குடிநீர்த் தொட்டியின் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுவதில்லை. மேல்நிலை குடிநீர்த் தொட்டி சுண்டமேடு மாநகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்தின் உட்பகுதியில் பள்ளி குழந்தைகள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதியில் உள்ளது. மேற்படி மேல்நிலைத் தொட்டியின் தூண்கள் மற்றும் தொட்டி பல இடங்களில் விரிசல் ஏற்பட்டு மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் மீண்டும் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு கொண்டுவர இயலாத நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்துள்ள மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள இந்த மேல்நிலைத் தொட்டியினை பொது ஏலம் கோரி இடித்து அகற்றி அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதி வழங்கலாம்.
2. பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி மிகவும் பழுதடைந்த மேல்நிலை குடிநீர்த் தொட்டியினை இடித்து அப்புறப்படுத்த பொது ஏலம் கோரி மேல்நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். ( அ.1 / 1053 / 2018)

– – – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**365)** திருப்பூர் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் வார்டு எண்.3,4,6 மற்றும் 7 ஆகிய பகுதிகளில் உள்ள பூங்காக்களில் தாவர கழிவுகளை சேகரிக்கும் வகையில் உரக்குழித் தொட்டி அமைத்தல் பணிக்கான மதிப்பீடு ரூ.7,25,000/–க்கு தயார் செய்யப்பட்டது. திருப்பூர் மாநகராட்சிகள் சட்டம் 2008 திருத்தப்பட்ட பிரிவு 101 உட்பிரிவு 2 (b)ன்படி ஆணையர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி மேற்படி பணிக்கு 18.05.2018 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு 20.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | திரு S. செல்வராஜ் | **6,67,530/–** | மதிப்பீட்டு விலையை விட **5.65%** அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது. |
| 2 | M/s. ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் | **6,75,899/–** | மதிப்பீட்டு விலையை விட **6.98%** அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்ப்ட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக இருந்ததால், மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திரு எஸ். செல்வராஜ் என்பவரிடம் இவ்வலுவலக கடிதம் எண். 55 / N / 2018-19, நாள் **23.08.2018–ல்** தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது **30.08.2018–ம்** தேதிய கடிதத்தில், இனம் எண்.3ல் ரூ.**3700/–**க்கு பதிலாக ரூ.**3560/–**க்கும், இனம் எண்.6–ல் ரூ.**400/–**க்கு பதிலாக ரூ.**355/–**க்கும் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு S. செல்வராஜ் (விலைக்குறைப்புக்கு பின்) | **6,63,135/–** | மதிப்பீட்டு விலையை விட **4.96%** அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட **4.96%** அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதியும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால், திருப்பூர் மாநகரில் கட்டிட கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்களின் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட **4.96%** அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

( ம.எண். 55 / N / 2018-19)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**366)** திருப்பூர் மாநகராட்சியில் பொது நிதியின் கீழ் வார்டு எண்.19, குருவாயூரப்பன் நகர் பகுதியில் உள்ள மாநகராட்சி பூங்காவிற்கு கூடுதல் பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கான மதிப்பீடு ரூ.14,10,000/–க்கு தயார் செய்யப்பட்டது. திருப்பூர் மாநகராட்சிகள் சட்டம் 2008 திருத்தப்பட்ட பிரிவு 101 உட்பிரிவு 2 (b)ன்படி தனிஅலுவலர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி மேற்படி பணிக்கு 28.12.2017 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு 20.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | M/s. ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 10,08,253/– | மதிப்பீட்டு விலையை விட 5.21% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது. |
| 2 | திரு சி.ராமசாமி | 10,38,111/– | மதிப்பீட்டு விலையை விட 8.33% அதிகம் | இணைக்கப்பட்டுள்ளது. |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக இருந்ததால், மேற்படி 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த திருவாளர்கள் ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் நிறுவனத்திடம் இவ்வலுவலக கடிதம் எண். 57/N/ 2018-19, நாள் 23.08.2018–ல் தங்களது ஒப்பந்தப்புள்ளியில் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டது. மேற்படி நிறுவனம் தனது 30.08.2018–ம் தேதிய கடிதத்தில், இனம் எண்.3ல் ரூ.3650/–க்கு பதிலாக ரூ.3610/–க்கும், இனம் எண்.13–ல் ரூ.110/–க்கு பதிலாக ரூ.107/–க்கும் விலைக்குறைப்பு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளது. மேற்படி விலைக்குறைப்பு கடிதம் பெறப்பட்ட பின் மீண்டும் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s. ஹரி கன்ஸ்ட்ரக்சன்ஸ் (விலைக்குறைப்புக்கு பின்) | 10,05,782/– | மதிப்பீட்டு விலையை விட 4.95% அதிகம் |

விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.95 அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதியும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால், திருப்பூர் மாநகரில் கட்டிட கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்களின் கூலி போன்றவை செந்தூரப் பட்டியல் விலைவிகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 4.95% அதிகமாக உள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.

(ம.எண். 57 / N / 2018-19)

– – – – –

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**367)** அரசாணை (நிலை) எண். 166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 23.11.2016ன் படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குட்பட்ட அரசு பள்ளிகள் / உள்ளாட்சி நிறுவன பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தனியார் வசம் ஒப்படைத்து பராமரிக்கவும், அதற்கான செலவீனத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி மாநகராட்சி பகுதிகளில் உள்ள அரசு மற்றும் உள்ளாட்சி பள்ளி கழிவறைகளை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள 172 பணியாளர்களையும், 4 கண்காணிப்பாளர்களையும் நியமித்துக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.183.00 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்.152, நாள் 31.10.2017ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 15.11.2017ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள கோவை நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். இ.1 / 6848/2016 நாள் 31.11.2018ல் பணி உத்திரவு 01.12.2017 முதல் 30.11.2018 வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி நிறுவனத்தார் 01.12.2018ல் பணி துவங்காமல் 01.06.2018ம் தேதியன்று பள்ளிகள் துவங்கும் கல்வியாண்டில் பணியினை துவங்கி செய்து வந்தனர். எனவே தற்போது 30.11.2018ம் தேதியன்று ஒப்பந்ததாரர் பணி காலம் முடிவடையும் நிலையில் மேற்படி நிறுவனத்தார் தனது ஒப்பந்த காலத்தை 01.12.2018 முதல் கல்வி நிதியாண்டு 30.04.2019 முடியும் வரை பணி நீட்டிப்பு செய்து தர கோரியுள்ளார்.

எனவே அந்நிறுவனத்தாரின் பணி உத்திரவு காலத்தினை 30.04.2019 வரை அதே ஒப்பந்தத்தில், நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அதே விலை விகிதத்தில் பணி கால நீட்டிப்பு உத்திரவு வழங்கவும், அதற்குரிய உத்தேச செலவீனத்தினை ஏற்கனவே மாமன்றம் அனுமதி அளித்துள்ள மாமன்ற தீர்மானம் எண்.152, நாள் 31.10.2017ல் ரூ.183.00 இலட்சத்தில் செலவிடவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு மேற்படி பணிகள் 01.12.2018 முதல் 30.04.2019 வரை மேற்கொள்ளவும் அதற்காகும் செலவீனத்திற்கும் மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( E.1 / 6848 / 2016 )

- - - - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**368)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு 2018–2019ம் ஆண்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.–3) துறை அரசாணை (2டி) எண். 37 நாள் 14.05.1999–ன் படி ஆண் பெண் இருபாலாருக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஜோடி காலணி வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டதின் பேரில் 503 ஆண் துப்புரவு பணியாளர்களும், 246 பெண் துப்புரவு பணியாளர்களும் துப்புரவு பணியில் ஈடுபடுவதால் மேற்படியாரின் உடல்நலத்தை கருத்திற்கொண்டு உடன் அவசர அவசியம் கருதி காலணி வழங்க வேண்டியிருப்பதால் இதனை வாங்க காலணி உற்பத்தி அலகு, தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம், முத்தூர் அவர்களடிம் பெறப்பட்ட விலைப்புள்ளியின் அடிப்படையில் ஆண்களுக்கு ஒரு ஜோடி காலணி ரூ.315/–ம் மற்றும் பெண்களுக்கு ஒரு ஜோடி காலணி ரூ.305/–ம் வீதமும் விநியோகம் செய்ய தெரிவிக்கப்பட்டதன் பேரில் மொத்த செலவீனம் ரூ.2,33,475/– ஆகும்.

**<u>368–ன் தொடர்ச்சி</u>**

மேலும் அரசு ஆணையின்படி இருபாலார்க்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.140/–க்கு மிகாத அளவிற்கு வாங்கி வழங்கும் பொருட்டு அதற்கான செலவீனம் ரூ1,04,860/– ஆகும். வரப்பெற்ற விலைப்புள்ளியின் அடிப்படையில் கூடுதல் செலவீனம்ாக ரூ.1,28,615/– ஏற்படுகிறது. இதனை பொது நிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ளவும் மற்றும் உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில்கள், திருப்பூர் நிறுவனத்தில் வாங்க அனுமதிக்கும் திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 15ன்படி வாங்கி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் பதிவு செய்யலாம். ( எச்.1 / 6301 / 2018)

– – – – –

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

– – – – –

**(ஒம்) க. சிவகுமார், எம்.ஏ.,**
**தனிஅலுவலர் (ம) ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையருக்காக,**
**திருப்பூர் மாநகராட்சி.**